அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பின் பொதுச் செயலர் ஆஷா மிஸ்ரா விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

தேசிய ஆய்வு நிதிய மசோதவை பார்லிமென்ட்ரி ஸ்டாண்டிங் கமிட்டிக்கு அனுப்புக..அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு வேண்டுகோள்

**ஆய்வுக்கான நிதி வழங்குதலில் மையப்படுத்துதலையும், தனியார்மயப்படுத்துதலையும் தேசிய ஆய்வு நிதியம் மசோதா முன்வைப்பதால் அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு இந்த மசோதாவை நிராகரித்து பார்லிமென்ட்ரி ஸ்டாண்டிங் கமிட்டிக்கு அனுப்புக என கோரிக்கை விடுக்கிறது.**

அறிவியல் பொறியியல் கழகச் சட்டம் 2008ஐ மாற்றி தேசிய ஆய்வு நிதி மசோதா-2023 அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய மசோதா அரசின் முழுமையான நிதி பெறும் அமைப்பாக இல்லாமல் கார்ப்பொரேட்டுகள், நன்கொடையாளர்கள் அமைப்புகள், சர்வதேச நிதி அமைப்புகளைச் சார்ந்த நிதிசார்புள்ள அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் முடிவெடுக்கும் அதிகாரம் என்பது பொறுப்பு சார் என்ற அடிப்படையில் பிரதம மந்திரி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிதியம், அறிவியல் தொழில்நுட்பம், கல்வி அமைச்சர்களும் பொறுப்பு சார் துனைத் தலைவர்களாகப் பங்கேற்க உள்ளனர். இக்குழுவின் கட்டுப்பாட்டில் தான் பல்வேறு துறைகளின் ஆராய்ச்சிகளும் பயன்பாடுகளும் தீர்மானிக்கப்பட உள்ளது. துவக்கத்தில் இந்த நிதியம் என்பது மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு நிதி வழங்வதாகத் திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் இப்பொழுது உயர்கல்வி நிலையங்கள் மட்டுமல்லாது அனைத்து துறைசார் ஆய்வுகளுக்கும் நிதி வழங்கும் அமைப்பாக மாற்றப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுக்கான ஒதுக்கீடாக ரூ 50000 கோடி ஆராய்ச்சி, மேம்பாடுக்காக ஒதுக்கப்படுள்ளதாக அறிவித்து இருக்கின்றனர். இதில் 72 சதவீதம் இது வரை கண்டறியப்படாத வழிகளில் தனியார் நிறுவனங்கள் பங்களிக்கும் என்றும் 28 சதவீதம் அரசால் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டு உள்ளனர். நிதி வழங்கும் கட்டமைப்பு என்பது பாஹ்-டோல் (Bayh-Dole) சட்டத்தின் வகையில் ஏற்பாடு செய்யப்படும். இந்த கட்டமைப்பை கல்வி நிறுவனங்கள் ஏற்கனவே எதிர்த்து

வருகின்றனர். இப்படிப்பட்ட சூழலில் கார்ப்பொரேட்டுகள் மற்றும் பெரும் வசதிமிக்க நிறுவனங்கள் தங்களின் அதிகாரத்தால் மத்திய அரசிடம் நிதி பெறுவதற்குத்தான் அதிக வாய்ப்பு உள்ளது.

ஒரு சதவீத உயர்கல்வி நிறுவனங்களே தற்போது முனைப்புடன் ஆராய்ச்சியில் பங்கு பெற்று வருகின்றன. உலகத்திலேயே ஆராய்ச்சி மேம்பாட்டிற்கு இந்தியா உள்நாட்டு பொருள் உற்பத்தி சதவீதத்தில் மிகக் குறைவான நிதியையே ஒதுக்கீடு செய்து வருகிறது. 2022ன் படி 0.65 சதவீத மட்டுமே ஒதிக்கீடு செய்துள்ளது. 2000த்தில் 0.8% என்றிருந்த நிதி ஒதுக்கீடு 0.65 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.அதே போல் உயர்கல்வியில் 2015ல் 39.96 சதவீதமாயிருந்த முழு நேர ஆராய்ச்சியாளர்கள் எண்ணிக்கை 2018ல் 36.18% சதவீதமாக குறைந்திருக்கிறது. அரசு நிதியுதவி பெறும் பொதுத்துறை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான நிதியுதவி என்பது 2015ல் 30.32 சதவீதத்தில் இருந்து 2018ல் 23.13 சதவீதமாகக் குறைந்து இருக்கிறது.

தேசிய ஆராய்ச்சி நிதியம் இது போன்ற பிரச்சினைகளைக் களைந்து ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்தி பொது மக்களுக்கு பயன்படும் நோக்கம் கொண்டதாகத் தெரியவில்லை. மாநிலப் பல்கலைக்கழகங்கள் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் நிரந்தரமாக கொண்டதாக இருக்க வேண்டும். அதிகார மனப்பான்மை, பால் சம்த்துவமின்மை, சாதி ரீதியான பாகுபாடு மற்றும் கூட்டு ஆராய்ச்சிக்கான முனைப்பின்மை ஆகியன பெருந்தடைகளாக இருக்கின்றன. இச்சூழலில் ஆராய்ச்சி நிதியம், ஒன்றிய அரசின் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான நிதி நிர்வாகத்தில் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பு இல்லாமல் கார்ப்பொரேட்டுகள் கை ஓங்கி இருக்கும் நிர்வாக அமைப்பாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதுமுள்ள கல்வியாளர்கள், மாநில உயர்கல்வி மன்றங்கள், ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்கள் கொண்ட அமைப்பின் மூலம் ஒன்றிய அரசு விரிவாக்கப்பட்ட ஜனநாயகப்பூர்வ அமைப்பாக இந்த நிதியம் செயல்பட வேண்டும். ஆனால் பல்வகையாளர்களின் பங்கேற்பின் மூலம் இது மேலும் வலுப்படும் என்பதை புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். காலநிலை மாற்றம் மற்றும் சமூக ஏற்றத் தாழ்வுகள் ஆகியன மிகப் பெரிய அச்சுறுத்தலாக

உள்ள சூழலில் இணைந்து செயல்படுவதன் மூலமும் பல்வகைத் தன்மை கொண்ட முனைப்புகளுமே சிறந்த தீர்வுகளைப் பெறமுடியும்.

எனவே தேசிய ஆய்வு நிதிய மசோதா-2023 மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த மசோதா அறிவியல் தொழில் நுட்பம், சுற்றுச்சூழல் & காடுகள் துறை சார்ந்த நிலைக் குழுவுக்குப் அனுப்பப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப் பட வேண்டும். இந்தக் குழு வளர்ச்சி சார் துறைகள், ஒன்றிய அரசின் முன்னணி துறைகள், மாநில அரசுகள், விஞ்ஞானிகள் மத்தியில் செயலாற்றும் அமைப்புகள், தனி நபர்கள் ஆகியோரிடம் கருத்துக் கேட்க வேண்டும். மத்தியப்படுத்தப்பட்டுள்ள நிதி வழங்கல், கல்வி சார் பார்வையின்மை, அமைப்பு ரீதியாக தற்போதிருக்கும் பிரச்சினைகள், தனியார்மயமாக்கப்பட்ட நிதி வேண்டுதல் ஆகிய தன்மை கொண்ட இந்த தேசிய ஆய்வு நிதியம் அறிவியல் சமூகத்தின் வழிகாட்டுதலுடன் மறு பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

நன்றி, அன்புடன்,

ஆஷா மிஸ்ரா, பொதுச் செயலர் 94253 02012

பொ.இராஜமாணிக்கம், உயர்கல்வி&ஆராய்ச்சி குழு 94429 15101
அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு